DISTRICT & SESSIONS COURTS SARISHTADAR
7198
12 SEP 2016
PUDUCHERRY

**ROC.NO.19264/2016/C4**

**P.DIS.NO. 145/2016**

Copy of G.O. (Ms) No.80, Labour and Employment (Q1) Department, dated 02.03.2016, is communicated with instructions to strictly adhere to the Guidelines issued in the said G.O.

HIGH COURT, MADRAS
DATED: 06.09.2016

REGISTRAR
(District Judiciary)

To

1. All the Principal District Judges/District Judges
2. Unit Heads in Chennai City

With a request to communicate this G.O. to all the Officers functioning in your unit/District

2090
12.9.2016

Endt. No. 2090/JD/A/2016, dt. 14.09.2016

Copy communicated to all the Judicial Officers, U.T. of Puducherry.

CHIEF JUDGE
PUDUCHERRY

சுருக்கம்

கருணை அடிப்படையில் பணி நியமனம் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விதி 110-ன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு – 1.2.2016 வரை கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களின் பணியை வரன்முறைப்படுத்துதல் – ஆணை மற்றும் வழிமுறைகள் – வெளியிடப்படுகின்றன.

---

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த் துறை**

அரசாணை (நிலை) எண்.80

நாள்: 02.03.2016.

மன்மத வருடம், மாசி மாதம் 19ஆம் நாள்

திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்க:

1. அரசாணை (நிலை) எண். 225, தொழிலாளர் துறை, நாள் 15.2.1972.
2. அரசாணை (நிலை) எண். 560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 3.8.1977.
3. அரசாணை (நிலை) எண்.42, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 12.03.2007.
4. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு நாள் 19.02.2016.

------

**ஆணை:**

பார்வை 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில், பணியிடை மரணமடைந்த அரசுப் பணியாளர்களின் குடும்பத்தில் ஏற்படும் திடீர் நிதி நெருக்கடியினை ஈடுசெய்திடும் பொருட்டு அவர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கிடும் திட்டம் செயல்படுத்த ஆணை வெளியிடப்பட்டது.

2. பார்வை 2–ல் படிக்கப்பட்ட அரசாணையில், பல வரைமுறைகளை உள்ளடக்கி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய வரம்பிற்குட்பட்ட பதவிகளிலும், கருணை அடிப்படையிலான பணி நியமனம் வழங்கலாம் என ஆணையிடப்பட்டது.

3. இதே அரசாணையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய வரம்பிற்குட்பட்ட பதவிகளில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களது பணி வரன்முறை குறித்த செயற்குறிப்பு அரசிற்கு அனுப்பப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைகளின் ஒப்புதலுடன் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறையின் ஒப்புதல் பெறப்பட்டு, தேர்வாணையத்தின் இசைவினைப் பெறப்பட்ட பின்னரே பணி வரன்முறை குறித்த ஆணை வெளியிடப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

[த.பி.பா]

4. பார்வை 3–ல் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் குறித்து பல்வேறு நெறிமுறைகள் / வழிமுறைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

5. மேற்காணும் நிலையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்ற அரசுப் பணியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்துவதில் பல்வேறு காரணங்களால் ஏற்படும் காலதாமதத்தினை கருத்திற்கொண்டு, 19.02.2016 அன்று சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் பின்வரும் அறிவிப்பை வெளியிட்டுள்ளார்கள் :–

> "கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு அலுவலர்கள் பணி வரன்முறை செய்யப்பட்ட பின்னரே, ஊதிய உயர்வு போன்ற பல்வேறு பணிப் பலன்களை அவர்கள் பெற இயலும். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒப்புதல் உள்ளிட்ட பல்வேறு நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டியுள்ளதால், இதில் காலதாமதம் ஏற்படுகிறது. இதனைத் தவிர்க்கும் வகையில் 1.2.2016 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித் தளர்வும் தேவைப்படாத அனைத்து நபர்களின் பணி நியமனமும், பொது அரசாணை மூலமாக முறைப்படுத்தப்படும். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டிய பதவிகளுக்கு, பொதுவான அரசாணை வெளியிடப்பட்ட பின்னர், ஆணையத்தின் ஒப்புதல் பெறப்படும். விதித்தளர்வு தேவைப்படும் அலுவலர்களைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒப்புதல் பெற்று விதிகளைத் தளர்வு செய்வதற்கான அரசாணைகள் வெளியிடப்படும். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒப்புதல் பெறப்படும் வரையில் அவர்களை தற்காலிக அரசு அலுவலர்களாகக் கருதி, அவர்களுக்கு ஆண்டு ஊதிய உயர்வு வழங்க வகை செய்யப்படும்".

6. மேற்கண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில் 1.2.2016 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை விரைவில் பணிவரன்முறை செய்திட ஏதுவாக, இந்நேர்வினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து கீழ்க்கண்ட ஆணை மற்றும் வழிமுறைகளை (Guidelines) பின்பற்ற வேண்டும் என ஆணையிடுகிறது.

(6.1) 1.2.2016 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government orders) தேவைப்படாத அனைத்து அலுவலர்களின் பணி நியமனமும் இதன் மூலம் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைபடுத்தப்படுகிறது.

(6.2) மேலே பத்தி 6.1–இல் உள்ள ஆணையினை செயல்படுத்த சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்கள் (appointing authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசு பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

(6.3) இதனைத் தொடர்ந்து இனம் 6.1–இல் கண்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உள்ளீட்டு எல்லைக்குள் வரும் பதவிகளில் பணியமர்த்தப்பட்ட அரசு அலுவலர்களின் பணியினை வரன்முறைப்படுத்திய பின், 1954–ம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய் ஒழுங்குமுறைகளில், ஒழுங்குமுறை 16 (b)–ன் கீழ் தேர்வாணையத்தின் இசைவினை பெறும் பொருட்டு உரிய முன்மொழிவுகள் நடைமுறையில் உள்ள வழிமுறைகளின்படி அரசுக்கு அனுப்பப்பட வேண்டும்.

(6.4) கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்ற அரசு அலுவலர்களின் பணியினை வரன்முறைப்படுத்த விதித் தளர்வு / அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படும் பணியாளர்களை பொறுத்தவரையில் அவர்களை தற்காலிக அரசுப் பணியாளர்களாக கருதி நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு அவர்களுக்கு இரண்டாம் மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும்.

(6.5) மேலே பத்தி 6.4–இல் குறிப்பிடப்பட்ட அரசுப் பணியாளர்கள் பொருட்டு உரிய விதித்தளர்வு / அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படும் கருத்துருவினை அரசிற்கு உரிய வழிமுறையாக அனுப்பப்பட வேண்டும். அதன் பின்னர் சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறையால், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒப்புதல் பெற்று, பின்னர் விதித்தளர்வு / அரசாணைகளுக்கு விலக்கு குறித்த அரசாணை வெளியிடப்பட வேண்டும்.

7. இவ்வரசாணை, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.எண்.9083/ஜி2/2016–1, நாள் 02.03.2016–இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

குமார் ஜயந்த்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அரசு முதன்மைச் செயலாளர் / செயலாளர்,
தலைமைச் செயலக அனைத்துத் துறைகள்.
அனைத்துத் துறைத் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட நீதிபதிகள்.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
சென்னை–3.
மாநில கணக்காயர், சென்னை–18.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–35.
அனைத்து சம்பள கணக்கு அலுவலர்கள் / அனைத்து கருவூல அலுவலர்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.
அனைத்து அமைச்சர்களின் நேர்முக உதவியாளர்கள், சென்னை–9.

<u>நகல்</u>
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர்,
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை – 9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அனைத்து பிரிவுகள்.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் துறை, சென்னை –9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

மா. பரிமளா
2/3/2016
பிரிவு அலுவலர்.
02/03/2016